எல்லோருக்கும் பயனுள்ள தகவல்கள்

பேச்சு மற்றும் கேளாமை குறைபாடுகளை தடுக்கும் பிரிவு

அனைத்திந்திய பேச்சு மற்றும் கேட்டல் கழகம்

மானசகங்கொத்ரி, மைசூர் – 570006


தொலைபேசி எண்: 0821-2514449, 2515805, 2515410, 2514313, 2515218, 2515618

தொலை நகலி: 0821-2510515

மின் அஞ்சல்: aiish_dir@yahoo.com

இணைய தளம்: www.aiishmysore.com


வேலை நேரம்: 9.00am - 5.30pm (விடுமுறை: சனி, ஞாயிறு மற்றும் மத்திய அரசு விடுமுறை நாட்கள்)



மிக எளிமை முறையில்

# உங்கள் குழந்தையின் பேச்சு மற்றும் கேட்கும் திறனை அறிந்துகொள்ள உதவும் பட்டியல்

## நினைவில் கொண்டு கவனியுங்கள்




**சரி பார்க்கும் பட்டியல்**

பேச்சு மற்றும் கேளாமை குறைபாடுகளை தடுக்கும் பிரிவு

அனைத்திந்திய பேச்சு மற்றும் கேட்டல் கழகம்

மானசகங்கோத்ரி, மைசூர் – 570006

தொலைபேசி எண் : 0821-2514449, 2515805, 2515410, 2514313, 2515218, 2515618

தொலை நகலி : 0821-2510515

மின் அஞ்சல் : aiish_dir@yahoo.com

இணைய தளம் : www.aiishmysore.com

உங்கள் குழந்தைக்கான பேச்சு மற்றும் காது கேளாமைக்கான பரிசோதனை



சரி பார்க்கும் பட்டியல்

# உங்கள் குழந்தைக்கான பேச்சு மற்றும் காது கேளாமைக்கான பரிசோதனை

## கீழெ கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளை வாசித்து 'ஆம்' / 'இல்லை' எனக் குறிக்கவும்.

| காது கேளுதல் மற்றும் புரிந்துகொள்ளும் திறன் — உங்கள் குழந்தை (எண் ☑ ஆம் / இல்லை) | குழந்தையின் வயது | பேசும் திறன் — உங்கள் குழந்தை (எண் ☑ ஆம் / இல்லை) |
|---|---|---|
| ☐ ☐ ❖ நீங்கள் பேசுவதை கேட்கிறதா?<br>☐ ☐ ❖ அதிக சப்தம் கேட்டால் திரும்பிப்பார்க்கிறதா/அழுகிறதா?<br>☐ ☐ ❖ அதிக சப்தம் கேட்டால் துக்கத்திலிருந்து எழுகிறதா?<br>☐ ☐ ❖ நீங்கள் பேசும் போது திரும்பிப் பார்க்கிறதா?<br>☐ ☐ ❖ அன்னையின் குரலை அறிந்து அழுகையை நிறுத்துகிறதா?<br>☐ ☐ ❖ நீங்கள் பேசுவதை பார்த்து குழந்தை சிரிக்கிறதா? | 0-3 மாதங்கள் | ❖ குழந்தை தானாக சப்தம் எழுப்புகிறதா? ☐ ☐<br>❖ நீங்கள் குழந்தையுடன் விளையாடும் போழுது உங்கள் குழந்தை கவனிக்கின்றதா ? ☐ ☐<br>❖ ஒரே சப்தத்தை மீண்டும் மீண்டும் எழுப்புகிறதா? ☐ ☐<br>❖ வெவ்வேறு விதமான தேவைகளுக்கு வெவ்வேறு விதமாக அழுகிறதா? ☐ ☐<br>❖ உங்கள் முகத்தை கண்டதும் குழந்தை சிரிக்கத் தொடங்குகிறதா? ☐ ☐ |
| ☐ ☐ ❖ உங்கள் குரலை வைத்து உங்கள் மனநிலையை அறிந்துகொள்கிறதா? எ.கா: கோபம்<br>☐ ☐ ❖ அழைப்பு மணி, நாயின் குரைப்பு போன்றவற்றை கேட்டால் குழந்தை திரும்பி பார்க்கிறதா?<br>☐ ☐ ❖ சப்தம் உண்டாக்கும் விளையாட்டுப்பொருளை கவனமாக பார்க்கிறதா? | 4-6 மாதங்கள் | ❖ ஏதேனும் சொல்ல விரும்பினால் 'பா' 'மா' 'கா' என்ற சப்தத்தை உண்டாக்குகிறதா? ☐ ☐<br>❖ பேச்சிலும் மற்றும் கை சைகையிலும் தொடர்புகொள்கிறதா? ☐ ☐<br>❖ தனியாக இருக்கும்போழுதோ அல்லது உங்களிடம் விளையாடும் பொழுதோ 'க,ம,ப,' பொன்ற வெவ்வேறு சப்தத்தை உண்டாக்குகிறதா? ☐ ☐ |
| ☐ ☐ ❖ 'மேஜை', 'நாற்காலி' போன்ற வீட்டு உபயோக பொருட்களை அறிந்து கொள்கிறதா?<br>☐ ☐ ❖ 'இங்கே வா', 'எனக்கு தா', போன்ற சிறிய கேள்விகளை புரிந்துகொண்டு நடக்கிறதா?<br>☐ ☐ ❖ ஒலிந்து பிடித்தல் போன்ற விளையாட்டுகளை புரிந்து கொள்கிறதா?<br>☐ ☐ ❖ குழந்தையுடைய பெயரை அழைத்தால் திரும்பிப் பார்க்கிறதா?<br>☐ ☐ ❖ நீங்கள் பொகும் பொழுது உங்களை கவனிக்கிறதா? | 7 மாதம் 1 வருடம் | ❖ தெளிவாக உச்சரிக்க முடியாவிட்டாலும், 'அம்மா, அப்பா, வேண்டும், வேண்டாம்' போன்ற வார்த்தைகளை உபயோகிக்கிறதா? ☐ ☐<br>❖ 'டாட்டா', 'வா வா' போன்ற வார்த்தைகளை உபயோகிக்கிறதா? ☐ ☐<br>❖ நீங்கள் சொல்வதை திரும்பச் சொல்ல முயற்சிக்கிறதா? ☐ ☐<br>❖ உங்கள் கவனத்தை ஈர்க்க, குழந்தை பேசுவது மற்றும் அழுவதை உபயோகிக்கிறதா? ☐ ☐ |
| ☐ ☐ ❖ பெயரைக் குறிப்பிட்டால் புத்தகத்தில் இருக்கும் தக்கப்படத்தை காண்பிக்கிறதா?<br>☐ ☐ ❖ உடல் உறுப்புக்களை கேட்டால் காண்பிக்கிறதா?<br>☐ ☐ ❖ 'பந்தை தூக்கி எரி', 'நீரைக்கொண்டு வா' போன்ற சிறிய கட்டளைகளை புரிந்துக்கொள்கிறதா?<br>☐ ☐ ❖ சிறிய கதைகள், சப்தங்கள், பாடல்கள் போன்றவற்றை கவனிக்கிறதா? | 1-2 வருடங்கள் | ❖ ஒவ்வொரு மாதமும் புதிய புதிய வார்த்தைகளை கற்றுக் கொண்டு பேசுகிறதா? ☐ ☐<br>❖ 'அம்மா எங்கே? இங்கே வா, எனக்கு வேண்டாம்', போன்ற ஒரிரண்டு வார்த்தைகளை பேசுகிறதா? ☐ ☐<br>❖ இரண்டு வார்த்தைகளை சேர்த்து பேசுகிறதா? ☐ ☐<br>❖ பல்வேறு விதமான சப்தங்களை உபயோகிக்கிறதா? ☐ ☐ |
| ☐ ☐ ❖ மேல் - கீழ், உள்ளே - வெளியே, சிறியது - பெரியது போன்றவற்றை அறிந்து கொள்கிறதா?<br>☐ ☐ ❖ பந்தை எடுத்து மேஜை மேல் வை போன்ற கட்டளைகளை புரிந்துகொள்கிறதா?<br>☐ ☐ ❖ தொலைப்பேசி மணி, கதவு தட்டல் சப்தம் போன்ற சப்தங்களை தொடர்ச்சியாக கேட்கின்றதா? | 2-3 வருடங்கள் | ❖ பெறும்பாலான வார்த்தைகளும் தெரிகிறதா? ☐ ☐<br>❖ எதையாவது கேட்க வேண்டுமெனில் இரண்டு அல்லது மூன்று வார்த்தைகள் கொண்ட வாக்கியத்தை உபயோகிக்கிறதா? ☐ ☐<br>❖ பேச்சு தெளிவாக இருக்கிறதா? ☐ ☐<br>❖ உங்கள் கவனத்தை ஈர்த்து, 'இது என்ன' 'அது என்ன' என்று கேட்கிறதா? ☐ ☐ |
| ☐ ☐ ❖ பக்கத்து அறையிலிருந்து அழைத்தால் குழந்தைக்கு கேட்கிறதா?<br>☐ ☐ ❖ டி.வி, ரேடியோ போன்றவற்றை மற்றவர்கள் கேட்கும் அளவிலே உங்கள் குழந்தையும் கேட்கிறதா?<br>☐ ☐ ❖ 'யார்? எதுக்கு? எப்படி? எங்கே?' போன்ற சிறு கேள்விக்களுக்கு பதிலளிக்கிறதா? | 3-4 வருடங்கள் | ❖ பள்ளி மற்றும் நண்பர்களுடன் நடந்த சம்பவத்தை வீட்டில் வந்து சொல்கிறதா? ☐ ☐<br>❖ 'ர, ல, த, ச' போன்ற சப்தத்தை தவிர மற்ற அனைத்தையும் சொல்கிறதா? ☐ ☐<br>❖ சரளமாக பேசுகிறதா? ☐ ☐<br>❖ குழந்தையின் பேச்சு மற்றவர்களுக்கும் புரிகிறதா? ☐ ☐ |
| ☐ ☐ ❖ பள்ளி, வீடு மற்றும் சுற்றத்தார் பேசுவதை குழந்தையால் கேட்டு புரிந்துகொள்ள முடிகிறதா?<br>☐ ☐ ❖ நீங்கள் சொல்லும் கதைகளை கேட்டு, அதிலிருந்து கேட்கப்படும் கேள்விகளுக்கு குழந்தையால் பதில் அளிக்க முடிகிறதா? | 4-4 ½ வருடங்கள் | ❖ மற்ற குழந்தைகளைப் போல குரல் தெளிவாக இருக்கிறதா? ☐ ☐<br>❖ பேசும் வார்த்தைகள், தெளிவாக இருக்கிறதா? ☐ ☐<br>❖ ஒரு தலைப்பை பற்றி பேசும்போது அதிலிருந்து விலகாமல் பேசுகிறதா? ☐ ☐ |
| | 4 ½- 5 வருடங்கள் | ❖ மற்ற குழந்தைகளிடமும் பெரியவர்களிடமும் எளிதாக பேச முடிகிறதா? ☐ ☐<br>❖ ஒரிரண்டு வார்த்தைகளைத் தவிர எல்லா வார்த்தைகளையும் தெளிவாக பேசுகிறதா? ☐ ☐<br>❖ மற்றவர்களைப்போல சரியான இலக்கணத்தை உபயோகிக்கிறதா? ☐ ☐ |

**உங்களுடைய பதில்:**

எல்லா கேள்விகளுக்கும் 'ஆம்' எனில் 'நல்லது'. உங்கள் குழந்தைக்கு எந்த குறையும் இல்லை.

ஒன்று முதல் இரண்டு கேள்விகளுக்கு 'இல்லை' எனில் 'எச்சரிக்கை'. உங்கள் குழந்தைக்கு பேசுவதிலும் காதுகேட்பதிலும் தாமதம் ஏற்படலாம்.

மூன்றிற்கும் மேற்பட்ட கேள்விகளுக்கு 'இல்லை' எனில் பேச்சு மற்றும் காது கேளாமைக்கான சிறப்பு நிபுணரை அணுகவும்.

**முடிவு:**